1994 ஏப்ரல் 28]

434--

ஆரம்பப்பள்ளி பாடப் புத்தகத்தில் கடவுள் வாழ்த்துப் பாடல் சேர்த்தல்.

23326*--திரு. வி. கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழக அரசு எல்லா சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலை ஆரம்பப் பள்ளிப் பாடப் புத்தகத்தில் சேர்க்க முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது வாய்ப்பு இல்லை.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆரம்பப் பள்ளிகளுக்கு விழாக்களுக்குச் செல்லுகின்ற போதெல்லாம், இறைவணக்கம் என்று சொல்லிவிட்டு, தமிழ்த் தாய் வாழ்த்து பாடுகின்றனர். ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு, இறைவணக்கத்திற்கும், தமிழ்த் தாய் வாழ்த்துக்கும் வேறுபாடு தெரியவில்லை என்பதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். இந்த அரசு சமயத்திலே நம்பிக்கையுள்ள அரசு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாய்மொழியையே இறைவனுக்கு இணையாகக் கருதுகிற சமுதாயம் நம்முடைய தமிழ்ச் சமுதாயம்.

திரு. வி. கே. லட்சுமணன்: அப்படியென்றால், திருக்கோவில்களில் இனிமேல் இறைவணக்கத்திற்குப் பதிலாக தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரிடம் கேளுங்கள். (சிரிப்பு)

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: கேள்வி அவ்வளவுதானா? (சிரிப்பு)

திரு. வி.கே. லட்சுமணன்: இப்பொழுது தமிழகம் முழுவதும் பல்கிப்பெருகி நாள்தோறும் இடைவிடாமல் நடந்து வருகிற கொலை, கொள்ளைகளுக்கும் கூட, ஆரம்பப்பள்ளிகளிலே நம்முடைய

மாணவர்களுக்கு ஆன்மீக (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். நீங்கள் சொல்லுங்கள். தினந்தோறும் நடைபெற்று வருகின்ற கொலை, கொள்ளைகளுக்கு ஆரம்பப் பள்ளிகளிலே நம்முடைய மாணவர்களுக்கு ஆன்மீக உணர்வை வளர்க்காததுதான் காரணம் என்று நான் கருதுகிறேன். இந்த அரசு சமயத்திலே நம்பிக்கையுள்ள அரசு. எனவே, ஆன்மீக உணர்வை வளர்க்கின்ற முறையிலே, ஆரம்பப் பள்ளிகளிலே மாணவர்களுக்கு, இந்த இறைவணக்கம் சொல்லிக் கொடுக்கப்படுமா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது சொந்தக் கருத்துக்களைப் பதிய வைக்க வேண்டுமென்று அக்கறை காட்டுகிறார்களே தவிர, உண்மையில் கேட்ட கேள்விக்கு விடை கிடைக்குமா என்ற வகையில் அவர் இங்கே கேட்கவில்லை என்று கருதுகிறேன். இருப்பினும் 'நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் காலையில் இறைவணக்கமாக அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும், நடுநிலை தொடக்கப்பள்ளிகளிலும் பாடப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் இதர பள்ளிகளில் அவரவர் மதத்திற்கேற்ற பாடல்கள்தான் இறைவணக்கப் பாடலாகப் பாடப்பட்டு வருகிறது. அனைத்து மதத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலை ஆரம்பப்பள்ளிப் பாடப் புத்தகத்தில் சேர்க்க அரசு முன்வருமா என்ற வினாவைக் கேட்டிருக்கிறார்கள். தேசிய கல்விக் கொள்கை 1986-ன்படி உயர்மட்டக் குழுவின் பரிந்துரைப்படி திருத்தியமைக்கப்பட்டு அதன் அடிப்படையில்தான் பாடநூல்கள் தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தால் வெளியிடப்படுகின்றன. இந்தப் பாடத் திட்டம் 5 ஆண்டுகளுக்கு இருக்கும். அதற்குப் பின்பு தர மதிப்பீடு செய்து மீண்டும் பாட நூல்களைக் கொண்டுவரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை எழும் போது இது பற்றிப் பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இந்த முயற்சியில் அரசுக்கு உதவ முன்வரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. லட்சுமணன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கிறபோது கூட இறை வணக்கமாகப் பாடப்பட்டு வருகிற பாடல் என்றுதான் சொன்னார். அப்படியானால் இறை வணக்கத்திற்கும் தமிழ்த்தாய் வாழ்த்துக்கும் வேறுபாடே இல்லை என்பதுதான் அரசினுடைய முடிவா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்படுகிறது என்று சொன்னதே இறைவணக்கமாக பாடப்படுவதைத்தான். இதர சமுதாய மொழிப் பள்ளிகளில் அவரவர் மதக் கோட்பாட்டின்படி இறை வணக்கம் பாடப்படுகிறது என்பதைத் தெரிவித்தேன். இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது என்று அவர் கருதுகிறார். வேறுபாடு இல்லை. அடுத்து ஆசிரியர்கள் புரிந்துகொள்ளவில்லை என்ற கருத்தை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதேபோல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேசியக் கொள்கையிலும், நாட்டின் ஒருமைப்பாட்டிலும் மிகுந்த அக்கறை கொண்டவர் என்பதை அரசு அறியும். அண்மையில் கூட அரசுப் பள்ளிக்கூடங்களிலேயும் அரசு கல்லூரிகளிலேயும் அரசு செலவில் இந்தியைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கூட ஒரு நல்ல உணர்வோடு சொல்லியிருக்கிறார். இதை எல்லாம் அரசு கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. போளூர் வரதன்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவரவர் வணங்குகிற கடவுளை நினைத்துப் பாடல் இருக்கிறது என்று சொன்னார்கள். முஸ்லிம்களும், கிருத்தவர்களும் மைனாரிட்டி என்ற பெயரால் கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொண்டு அந்தந்த மதத்திற்கு ஏற்றவாறு பாடல்களைப் பாடி அந்தக் குழந்தைகளின் மனதில் அந்தச் சமுதாய உணர்வுகளைப் பதிய வைக்கிறார்கள். இந்து என்று வருகிறபோது மைனாரிட்டியாக வருவதில்லை. அரசு கல்லூரிகளிலும், பள்ளிகளிலும்தான் இந்துக்கள் அதிகமாகப் படிக்கிறார்கள். ஆகவே இந்துக்கள் வழிப்படுகிற ஏதேனும் ஒரு தெய்வத்தினுடைய பாடலை இந்துப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மதத்தினர் நடத்துகிற பள்ளிகளில் அரசு தலையிடுவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்துக்கொண்டதற்காக நன்றி. அரசு பள்ளிகள், கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இறைவணக்கமாக தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்திக்கொண்டிருக்கக்கூடிய

புரட்சித் தலைவி ஆட்சியில் கல்விக் கொள்கையில் மாறுதல் செய்து ஆரம்பப் பள்ளியிலிருந்து அரசை நம்பிப் பயில்கிற ஏழைக் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்றுத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான கருத்துக்கள் முன்பே பாட நூல்களிலே இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 435, திரு. மு. நடேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

435--

சேலம் மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஏற்படுத்துதல்.

*26190-திரு. மு. நடேசன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டத்தில் பல்கலைக் கழகம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில 13 ஆர்ட்ஸ் காலேஜ்கள் உள்ளன. அதேபோல் ப்ரஃபஸனல் காலேஜ்கள் 9 உள்ளன. பாலிடெக்னிக்குகள் 9 உள்ளன. மேலும் சேலம் மாவட்டத்தில 134 மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன. சேலத்திலிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் வருகின்ற காரணத்தால் நீண்ட நெடிய தூரம் வரவேண்டி இருக்கிறது. ஆகவே புரட்சித் தலைவி ஆட்சியில் கருணைகூர்ந்து இந்தக் கோரிக்கைகளை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலும், அதன் அருகிலே இருக்கின்ற தர்மபுரி மாவட்டத்திலும் அதிக எண்ணிக்கையிலே கல்லூரிகள்